

சிவாச்சாரியாரின்

# அருள்ஜோதி

## சமய சஞ்சிகை



ஆசிரியர்

**கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA
2004-07-30
SRI LANKA.
282/2, NAVALAR ROAD

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை இந்துமத குருபீடாதிபதி

சிவாகம ஞானி

சிவாச்சார்ய சிம்மம்

## அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சார்யார்

அவர்களின் ஞாபகார்த்தமாக

சிவாச்சாரியாரின் ......

# அருள் ஜோதி

எனும் ஆன்மீக இதழ் வெளி வருகிறது

என்பதனை ஆன்மீகப் பெருமக்களுக்கு

அறியத்தருகிறோம்.



**சர்வதே இந்துமத குருபீடாதிபதி**

**சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடாதிபதி**

**கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார்**

**(அகில இலங்கை சமாதான நீதவான்)**

## சர்வதேச இந்துமத குருபீடம்

**46, 7வது ஒழுங்கை, (புளூமென்டோல் வீதி),**

**கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13.**

**தொலைபேசி : 2393436. 0722 - 422239**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

ஸ்ரீ சந்திர மௌளீஸ்வராய நம
ஸ்ரீ சங்கர பகவத் பாதாசர்ய பரம்பராகத

# ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள்

அவர்கள

ஸ்ரீமடம் ஸமஸ்தானம்,
1, சாலைதெரு, காஞ்சிபுரம் – 631502

## அருளாசியுரை

"இலங்கை இந்துமத குருபீடாதிபதி" சிவாகம ஞானி "சிவாச்சார்ய சிம்மம்" "கலாநிதி" அமரர் அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களின் ஞாபகார்த்தமாக, சர்வதேச இந்துமத குருபீடம் வெளியிட்டுவரும் "அருள்ஜோதி" எனும் ஆன்மீக சஞ்சிகை சமய கட்டுரைகள், ஆகம, புராண கட்டுரைகள், வினா - விடை, மாணவர் பகுதி, மங்கையர் பகுதி, செய்திக் கோவை என பல சிறப்பு அம்சங்களுடன் வெளிவருவது அறிந்து சந்தோஷம்.

இம்மலரின் ஆசிரியர் "கலாநிதி" ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள் அவர்களின் சமயப் பணியைப் பாராட்டி, ஆன்மீக அன்பர்களுக்கு அருளின்பம் ஊட்டும் மலராக "அருள்ஜோதி" மலர ஆசீர்வதிக்கிறோம்.

நாராயணஸ்மிருதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



சிவாச்சாரியாரின்

# அருள் ஜோதி

(ஆன்மீக சஞ்சிகை)

அருள் 08 ஆனி – ஆடி 2004 ஜோதி – 74

ஆசிரியர் : கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் - ஜே. பி.

## மலர்ந்த புஸ்பங்கள்

1. ஆசியுரை, அருளுரைகள்
2. இசைத்தமிழ்
3. திருக்குறள்
4. திருவாசகத்தேன்
5. ஜென்மத்திரயம்
6. அருள்ஜோதி வினா விடை
7. நம்பினார் கெடுவதில்லை
8. குருஜியின் சேவைகள்
9. தேவியின் அறுபத்து நான்கு சக்தி பீடங்கள்

**சர்வதேச இந்துமத குருபீடம்**

**சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடம்**

(அரச அங்கீகாரம் பெற்ற சமயஸ்தாபனம்)

இல. 46, 7வது லேன், புளூமெண்டால் வீதி, கொட்டாஞ்சேனை, கொழும்பு-13.

தொலைபேசி, தொலை நகல்: 0094-11-2393436

செல்லிட பேசி: (0094)-0722-422239



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூசிக வாகன மோதக ஹஸ்த
சாமர கர்ண விளம்பித சூத்ர
வாமன ரூப மஹேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சர்வ மங்கள மாங்கல்யே
சிவே சர்வார்த்த சாதகே
சரண்யே த்ரியம்பகே தேவி
நாராயணீ நமோஸ்துதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் முருகா




உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாமியே சரணம் ஐயப்பா



**லோக வீரம் மஹா பூஜ்ஜம்**
**சர்வ ரக்ஷாகரம் விபும்**
**பார்வதி க்ருதயானந்தம்**
**சாஸ்தாரம் ப்ரணமாம் யகம்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசைத்தமிழ்

கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்தகுடிகளாகிய தமிழினத்தின் தாய்மொழியாம் தமிழ் மொழியை 'இன்தமிழ் இயற்கை இன்பம்' என்றார் கவிச்சக்கரவர்த்தி கம்பர். 'முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்பான்' என்று முருகப் பெருமானைப் பாராட்டுகிறார் அருணகிரிநாதர். இயல், இசை, நாடகம் என்னும் முப்பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளமையினாலே தான் 'முத்தமிழ்' எனச் சிறப்புப் பெற்றது தமிழ் மொழி.

இயல் உயிராகவும், இசை உணர்வாகவும், நாடகம் உடலாகவும் கொண்டு தமிழ் திகழ்கிறது. கூத்தெனப்படுவதே நாடகமாகும். இன்றைய தினம் இயல் நூலாகச் சிறிதும் குறைவேதுமின்றித் திகழ்வது தொல்காப்பியமாகும். இதே போன்று, இசை நூலும், நாடக நூலும் பண்டைய நாளில் இருந்திருத்தல் வேண்டும். இன்று காணப்படும் சிலப்பதிகாரத்தில் இசையைப்பற்றிய குறிப்பும், நாடகத்தைப்பற்றிய குறிப்பும் இருப்பதைக்கொண்டு இதை நாம் உறுதி செய்து கொள்ள ஏதுவாகிறது. தமிழின் பெருமைக்கு மேன்மேலும் மெருகேற்றுவது இசையேயாகும்.

## நூல்கள்

பெருநாரை என்ற நரம்பு இசை பற்றிய இசைத்தமிழ் நூலும், துளைக்கருவிகள் குறித்த பெருங்குருகு என்னும் இசைத்தமிழ் நூலும் முதற் சங்ககாலத்தில் இருந்தன.

விரிவான இசை இலக்கணத்தைக் குறிக்கும் 'பேரிசை' என்னும் நூலும் சுருக்கமான இசை இலக்கணத்தைக் குறிக்கும் நூலான 'சிற்றிசையும்' இடைச்சங்க காலத்தில் சிறப்பான செல்வாக்குப் பெற்றிருந்தன. எனினும் இந்நூல்கள் இப்போது இல்லை.

இசை மரபு, இசைநுணுக்கம், பஞ்சமரபு என்னும் இசைத்தமிழ் நூல்கள் கடைச்சங்க காலத்தில் திகழ்ந்தன. பழந்தமிழ் இலக்கண இலக்கிய நூல்களிலும் அவற்றின் உரைகளிலும் இசையிலக்கணச் செய்திகள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

இன்று இசைத்தமிழ் பற்றிய குறிப்புகளை தொல்காப்பியம், சிலப்பதிகாரம் ஆகிய இவ்விரண்டு நூல்களுள் தவிர வேறெங்கும் காண முடியவில்லை. 'இசைத்தமிழ் நூல்களாகிய பெருநாரையும் பெருங்குருகும் பிறவும் தேவ இருடிநாதன் செய்த பஞ்சபாரதீயம் முதலான தொன்னூல்களும் இறந்தொழிந்தன' என அடியார்க்கு நல்லார் தம் சிலப்பதிகார உரையுள் செப்புகின்றார். இதோடல்லாது, தேவ இருடியாகிய குறுமுனிபாற் பாடம் கேட்ட மாணாக்கர் பன்னிருவருட சிகண்டியென்னும் அருந்தவ முனிவர் செய்த இசை நுணுக்கமும், பரசவ முனிவர்களில் யாமளேந்திரர் செய்த இந்திரகாளியமும், அறிவனார் செய்த பஞ்சமரபும் அழிந்து பட்டதாக அறிகிறோம். (இப்போது பஞ்சமரபு என்னும் நூல் அச்சில் வந்துள்ளது.) ஆதலின், இதனை ஆழ்ந்து நோக்குங்கால் 'இசைத்தமிழ்' நூல்கள் பல இருந்திருக்க வேண்டும் எனக்கொள்ள ஏதுவாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நோக்கம்

புனத்திலும், பொழிலிலும், குன்றத்தின் மீதும், மருதத்தண் பண்ணையிலும், முல்லைப் புறவத்திலும், கடற்கானலிலும், கான்யாற்றுக், கரையிலும், அருஞ்சுரத்திலும், மனையினகத்தும், மன்றத்தினுள்ளும், தேவர் கோட்டத்தும், அறவோர் பள்ளியிலும் இசை வழங்கிய நாடு நம் தமிழ்நாடு.

இத்தமிழ்நாட்டின் கண் 'இசை' எங்கனம் உண்டாகியிருத்தல் வேண்டும் எனவும், அவ்விசையினை உண்டாக்கிய முறைகளையும் செந்தமிழ் நாட்டின் முக்கிய முதலிரண்டு இசைக்கருவிகளையும் பற்றி சிறிது ஆராயும் முன்பு, மெல்லென்றிசைக்கும் தென்றலினுயிர்ப்பிலும், இழுமென இழிதரும் அருவி நீரிலும், நறுமலரில் முரலுகின்ற தேன் வண்டினொலியிலும் இசையினைக் கேட்டு உவந்த பழந்தமிழர் பாடன்மகளது மிடற்றுப்பாடலையும், பாணன் இசைத்த யாழ் பாடலையும், சூழலோன் தந்த வங்கியப் பாடலையும் செவியாரக்கேட்டு இன்பமெய்திய முறையினையும் இவ்விசையின் வளர்ச்சியையும் தன்மையையும் நோக்குவோம்.

## கலைகளின் தோற்றமும் இசையின் வடிவமும்

ஆதிமனிதர்கள் தம் அறிவாற்றலை வெளிப்படுத்தத் தோன்றியது மொழிக்கலை. கலைகள், மக்களின் அறிவு விளக்கத்திற்குச் சான்றாகும். கலைக்கு அடிப்படையாக அமைந்தது சோர்விலா முயற்சி. அம்முயற்சியின் பயனாய் உலகின் கண் தோன்றியவை பல்வேறு கலைகளாகும்.

கலையாவது ஒரு நாட்டினரின் நாகரீக வாழ்வினை எடுத்துக்காட்ட வல்லதாகும். அக்கலையானது, அவரவர் மொழியிலேயே இருத்தல் வேண்டும். அவ்வாறிருந்தாலொழிய அக்கலையைக் கேட்பவர் உணர்ந்து, போற்றி புகழ்ந்து விளக்க முடியாது, கலையும் வளர்ச்சியுறாது என்பதும் உறுதி, ஆகவே, கலைகள் அனைத்தும் அவரவர் தாய் மொழியில் அமைதல் வேண்டும் என்பது உலகம் ஒப்புக்கொண்ட ஒன்று. அத்தகைய கலைகளுள் சிறந்தது இசைக்கலையேயாம்.

பண்டைப் பேச்சொலியின் இருபிரிவுகளே எழுத்தொலியும், இசையொலியும். அவற்றுள் ஒன்று, ஒலி அலை அளவைப் பெருக்கிக் கால அளவோடு (தாளத்தோடு) இணைந்து இசையாயிற்று. மற்றதொன்று, கருத்துணர்த்தும் அளவுக்கு குரல், நிறம் (இராகம்) பெற்று உயிர் மெய்யாகி எழுத்தொலியானது. பேச்சொலிக்கும், இசையொலிக்கும் நிறைந்த ஒற்றுமை உண்டு. மூலாதாரம் தொடங்கித் தலையுச்சிவரை செல்லும் காற்றை அடக்கி நாதத்தைச் சுரக்கோவைகளால் வகைப்படுத்திப் பாடுதல் பண்ணெனவும், பல இயற்பாக்களோடு இராகத்தை இசைத்தலால் இசையெனவும் கூறப்பட்டது. இவற்றை நன்கு கூர்ந்து கவனிக்கும்போது இசையின் தன்மை நமக்குப் புலனாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசையில் உள்ள ஆழம் பேச்சில் இருப்பதில்லை. பேச்சில் உள்ள வேகம் இசையில் இருப்பதில்லை. இசையில் வரும் இராகம் என்பது ஓர் இசைத்தத்துவமாகும். நுண்பொருளின் உட்கருத்தையும், உணர்ச்சியையும் வெளிப்படுத்தி அறிவித்தலே இசை எனலாம். இவ்விசை மக்களின் மனக்கவலையைத்தீர்க்கும் நன்மருந்தாய் விளங்கி வருகிறது.

நம் முன்னோர் தம் நுண்ணறிவால் கண்டு பயன்படுத்திய பழந்தமிழ்ப்பண்புகளின் திட்ப நுட்பமும் சிறப்பும் தமிழ் இலக்கியங்களில் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

## இடைக்கால நிலை

கி. பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரை வளர்ச்சியேதுமின்றி மங்கிக் கிடந்த இவ்வுயர் கலையினைப் போற்றி, பேணி வளர்க்கும் திறனற்றவர்களாயினர் தமிழர்.

பின்னாளில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய திருமுறை ஆசிரியர்களும் பெரியாழ்வார் முதலிய ஆழ்வார்களும் தோன்றி இசைக் கலையைப் பரப்பினர்.

## இசையோடு இயைந்த வாழ்க்கை

நம்மிடத்தே இன்ப மிகுதி ஏற்படினும் அல்லது துக்கம் பீறிட்டு வந்திடினும் எப்படிக் கண்ணீர் பெருகிறதோ அவ்வண்ணமே நமது இன்பத்திலும், துன்பத்திலும் முழு பங்கெடுப்பது இசையே எனில் மறுத்தல் இயலாது.

இன்றைய தினம் தாலாட்டு முதல் ஒப்பாரி வரை வாழ்வு முழுவதிலும் இசை முதன்மையான இடம் பெற்றிருக்கிறது. அன்றைய நாளில் இசையானது துயிலெழுப்பவும் கொள்ளப்பட்டது என்பதற்குச் சான்று பகர்கிறது 'திருப்பள்ளியெழுச்சி.' இதனை இன்றும் நம் கோயில்களில் காணலாம்.

*................. தீந்தொடை*
*விளரி நரம்பின் நயவரு சீறியாழ்*
*மலியூம் பொங்கர் மகிழ்குரற் குயிலொடு*
*பணர்துயி லெழூப்பும் புனர்தெளி காலையும்.*

என வரும் அகநானூற்று (279) அடிகளானும்,

*'மதிநிலாக் கரப்ப வெள்ளி ஏர்தா*
*வகைமான் நல்லில் ...........*
*பொறிமயிர் வாரணம் பொழுதறிந்து இயம்ப*
*பொய்கைப் பூமுகை மலரப் பாணர்*
*கைவல் சீறியாழ் கடன் அறிந்து இயக்க*
*இரவுப்புறம் பெற்ற ஏம வைகறைப் .........*

என வரும் புறநானூற்று (398) வரிகளாலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் பெருங்கதை அடியாலும் இது நமக்குத் தெளிவாகிறது.

வாழ்வும் சாவும் இசையோடு இயைந்தது மட்டுமன்றி சமீப காலத்தில் நல்ல இசையினால் பயிர்களைச் செழிப்புற வளரச் செய்யலாம் எனவும், வாழை போன்ற மரங்கள் இசையினால் அதிக விளைச்சலை அளிக்கின்றன எனவும் ஆராய்ச்சியாளர்கள் சோதனையின் மூலம் எடுத்துக் காட்டியுள்ளனர்.

## இசையின் பெருமை

நம் மூத்தோர் இறைவனையே இசை வடிவமாகக் கண்டனர். 'ஏழிசையாய், இசைப்பயனாய்' என்னும் தொடரை நோக்கும் போது இது நன்கு புலனாகும். பண்டைக்காலங்களில் தெய்வங்களை வழிபட இசையைப்பயன்படுத்தி வந்தனர் என்றும் அந்த இசையில் இறைவனே மயங்கியதாகவும் கூறப்படுகிறது.

சேரமான் பெருமான் நாயனார் என்பவர் தினமும் இறைவனை வழிபடுவார். அவர் வழிபட்டு முடிந்ததும் சிலம்பொலி கேட்கும். அச்சிலம்பொலி கேட்பின், இறைவன் அந்நாயனாரது பூசையை ஏற்றுக்கொண்டதாகக் கொள்வார். ஆனால், ஒரு நாள் அன்னார் வழிபாடு முடிந்ததும் சிலம்பொலி கேட்கவில்லை. அதற்காக அவர் மிகவும் வருந்தினார். 'யான் யாது தவறு செய்தேன்? தவறேதும் இழைத்திருப்பின் எம்மை மன்னித்து அருளும்' என நெஞ்சுருக வேண்டி வெகுநேரம் நின்றார். அச்சமயத்தே சிலம்பொலி கேட்கவும் அகம் மிக மகிழ்ந்தவராய், 'யான் இழைத்த தவது யாதோ?' என வினவ, அதற்கு இறைவன்,

*'மன்றி னிடைநம் கூத்தாடல்*
*வந்து வணங்கி வன்தொண்டன்*
*ஒன்றும் உணர்வால் நமைப்போற்றி*
*உரைசேர் பதிகம் பாடுதலால்*
*நின் றுகேட்டு வரத் தாழ்ந்தோம்'*

எனக் கூறியதாகப் பெரிய புராணம் பகர்கிறது.

இங்ஙனம் இறைவனே இசையின் பால் மயங்கி நின்றதை அறிகிறோம்.

'இசை' யென்பது நாம் இன்னது என்று எடுத்து விளக்க இயலா ஓர் இனிய ஓசை. 'பல இயற்பாக்களுடனே நிறத்தை (இராகம்) இசைத்தலால் இசை எனப் பெயராம்' என்று அடியார்க்கு நல்லார் தம் சிலப்பதிகார உரையுள் அரங்கேற்றுக் காதையில் விளக்குகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசையின் திறனை விளக்கும் வகையில்,

*'வெந்தழல் நீராகும், வெள்ளெலும்பு பெண்ணாகும்,*
*வந்தமத வேழம் வணங்கிடுமே - சந்தமெழப்*
*பாடுவார் உள்ளுருகிப் பாடும் தமிழிசைக்கு*
*நீடுலகில் உண்டோ நிகர்'*

என்கிறார் கவிமணி தேசிக விநாயகர் பிள்ளை அவர்கள்.

*'கல்லு முருகும் கனலுருகும்*
*கல்வி யறிவு பெற்றோர்தம்*
*சொல்லு முருகும் சோர்வழியும்*
*சுவைகள் மிகவே செய்திடுமால்*
*அல்லு முருகி அகன்றோட*
*அறியா அறிவும் அங்கோடச்*
*செல்லு முருகக் குளிர்ந்ததுவும்*
*செல்வத் தமிழின் இன்னிசையே*

என்னும் பாடல் தமிழிசையின் தன்மையை நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறது, போற்றிப் புகழ்கிறது.

*'நலிவாரும் மெலிவாரும் உணர்வொன்றாய் நயத்தலினால்*
*மலைவாய்வெள் ளெயிற்றரவம் மயில் மீது மருண்டுவிழும்*
*சலியாத நிலைஅரியும் தடங்கரியும் உடன்சாரும்*
*புலிவாயின் மருங்கணையும் புல்வாய் புல்வாயும்.'*

என வரும் பெரிய புராண அடிகள் இசையில் மயங்கிய நிலையில், பாம்பு மயில் மீது மருண்டு விழும், சிங்கமும், யானையும் உடனிருக்கும், புலியின் அருகே மானிருக்கும் என்பதை நமக்குத் தெரிவிக்கிறது.

ஒரு பெண் தண் புனலில் நீராடி விட்டு தலைமுடியைக் கோதி காற்றாற்றியவாறு தினைப்புனத்தில் குறிஞ்சிப்பண்ணை இசைத்துக் கொண்டிருக்க, தினைப் பயிரைத் தின்ன வந்த மதங்கொண்ட யானை ஒன்று, அவளின் குறிஞ்சிப் பண்ணைக் கேட்டு மயக்குண்ட நிலையில் நின்றதாக அகநானூற்றில் (102),



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*'ஒலியல் வார்மயிர் உளரினள் கொடிச்சி,*
*பெருவரை மருங்கில் குறிஞ்சி பாடக்,*
*குரலும் கொள்ளாது. நிலையினும் பெயராது,*
*பாடஅப் பைங்கண் பாடுபெற் றொய்என*
*மறம்புகல் மழகளிறு உறங்கும'*

எனக் கூறப்படுவதைக் காண்கிறோம்.

மேலும்,

*'கலவர்தம் சிறுபறை இசையின் கைவினைப்*
*புலவர்தேம பிழிமகிழ் குரவை பொங்குமே,*
*குலவுகார்க் கோவலர் கொன்றைத் தீங்குழல்*
*உலவு நீள் அசுணமா உறங்கும் என்பதுவே.'*

என வரும் சூளாமணி அடிகளால் இசையில் மயங்கும் அசுணமாவைக் காண்கிறோம்.

ஆனாய நாயனாருடைய குழலிசை வெளிப்பட்ட போது, நிற்பனவும் சரிவனவும் அவ்விசையின் வயப்பட்டு, அசைவற்றுக் கிடந்தன எனவும் அறிகிறோம்.

தென்னிலங்கை வேந்தன் இராவணன் கயிலை மலையைத் தூக்கி, கைந்நைந்து சாமகானம் பாடி இரக்கம் பெற்றது, அகத்தியர் யாழ் மீட்டி அரக்கன் ஒருவனின் உள்ளத்தை உருக்கியது, மதம் கொண்ட யானை நகரை அழித்துத் திரிந்தக்கால், உதயணன் யாழ் வாசித்து அதனை அடக்கித் தனக்கு ஏவல் செய்யுமாறு பணித்தது போன்ற செய்திகளைப் புராணங்களிலும் இலக்கியக் கதைகளிலும் காணுகிறோம்.

யானைப்பாகனுடைய குத்துக்கோலுக்குப் பணியாத யானை யாழின் இசைக்கு அடிபணியும் என்பது,

*'யாழ்வரைத் தங்கி யாங்கு'*

என வரும் கலித்தொகை அடியாலும், பாணர் இசைக்கும் பாலை இசை மறவர்தம் கொடுஞ் செயலையும் மாற்றும் தன்மையுடையது என்ற உண்மையை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*'ஆறலைக் கள்வர் படைவிட அருளின்*
*மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை'*

என வரும் பொருநராற்றுப்படை அடிகள் நமக்கு உணர்த்துகின்றன.

கொடிய புலியுடன் மோதித் தாக்குண்ட தம் கணவரின் புண்களை ஆற்றுவிக்கும் கொடிச்சியர் பாட்டுப்பாடி அவர்தம் துன்பத்தைக் குறைப்பர் என்பன போன்ற பழந்தமிழ்க் கதைகளாலும் இசையின் வல்லமையையும் தமிழர்தம் இசையீடுபாட்டையும் உணர்கிறோம். இசையின் மேன்மைக்கு இதனினும் வேறு சான்று வேண்டுமோ?

## இசையின் தன்மை

நுண்கலைகள் எல்லாவற்றையும் விட இசையானது மனித உள்ளத்தின் அடித்தளத்தில் ஆழப் பதிவதுடன் முழுமையும் அடைகிறது எனலாம். இசைக்கு அசுணப்புள்ளே கட்டுண்டு மயங்கிக் கிடக்கும் தன்மை பெற்றுள்ள போது பகுத்தறிவு படைத்த மனிதருள் தன்னையிழந்து மயங்காதவர் ஒருவரும் இரார் என்பது உறுதி. மனிதரைக் கவர இசைத்திறமை மட்டும் போதுமானதன்று. மொழியும், அதன் அமைப்பும், இசை பாடுவோரின் குரலும், பொருள் விளங்கப்பாடுதலும் மிக முக்கியம்.

சின்னஞ்சிறு குழந்தை எழுப்பும் பொருள்ளற்ற ஓசை தாய்க்கு இனிய இசையாக இருக்கிறது. குயில் தன் பேடையை அழைக்கவும், இன்ன பிறவற்றுக்காகவும் எழுப்பும் ஓசையை ஒப்பற்ற இனிய இசை என்கிறோம். 'இசைக் குயில்' என்றும் 'குயிலிசை' என்றும் கூறுகிறோம். ஆனால், அதே சமயத்தில் 'காகம் கரைகிறது' என்கிறோம். மாடு 'அம்மா' என்றழைக்கும் ஓசையை விரும்புகிற அளவிற்குக் கழுதையின் கத்தலை விரும்புவதில்லை. கழுதை கத்துகிறது என்று இழிவு தோன்றக் கூறுகிறோம். காரணம் என்ன? இனிப்பை விரும்பும் அளவு க்சப்பை விரும்பாததே, எத்தகைய விந்தையான மனிதர்கள் நாம்!

கேட்பாரைப் பிணிக்கும் இனிய தன்மையைப் பெற்ற ஒலியே இசையெனில் சாலப் பொருத்தமுடையதாகும். மற்றவையெல்லாம் வெறும் ஓசையே – கூச்சலே – சத்தமேயாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள் - (அதிகாரம் - 4)

(அ∴தாவது, அம்முனிவரான் உணர்த்தப்பட்ட அம்மூன்றனுள் ஏனைப் பொருள் இன்பமும் போலாது. அறன் இம்மை மறுமை வீடு என்னும் மூன்றனையும் பயத்தலான், அவற்றின் வலியுடைத்து என்பது கூறுதல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும். 'சிறப்புடை மரபின் பொருளும் இன்பமும் அறத்துவழிப் படூஉம் தோற்றம் போல' (புறநா. 31) என்றார் பிறரும்)

***சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூங்கு***
***ஆக்கம் எவனோ உயிர்க்கு.*** **31**

சிறப்பு ஈனும் வீடுபேற்றையும் தரும், செல்வமும் ஈனும்–துறக்கம் முதலிய செல்வத்தையும் தரும், உயிர்க்கு அறத்தின் ஊங்கு ஆக்கம் எவன் ஆதலான் உயிர்கட்கு அறத்தின் மிக்க ஆக்கம் யாது? (எல்லாப் பேற்றினும் சிறந்தமையின், வீடு 'சிறப்பு' எனப்பட்டது. ஆக்கம் தருவதனை 'ஆக்கம்' என்றார். ஆக்கம் மேன் மேல் உயர்தல். ஈண்டு 'உயிர்' என்றது மக்கள் உயிரை, சிறப்பு செல்வமும் எய்துதற்கு உரியது அதுவே ஆகலின். இதனான் அறத்தின் மிக்க உறுதி இல்லை என்பது கூறப்பட்டது.)

***அறத்தினூங்கு ஆக்கமும் இல்லை அதனை***
***மறத்தலின் ஊங்கில்லை கேடு.*** **32**

அறத்தின் ஊங்கு ஆக்கமும் இல்லை – ஒருவனுக்கு அறஞ்செய்தலின் மேற்பட்ட ஆக்கமும் இல்லை, அதனை மறத்தலின் ஊங்குகேடு இல்லை – அதனை மயக்கத்தான் மறத்தலின் மேற்பட்ட கேடும் இல்லை. ('அறத்தின் ஊங்கு ஆக்கமும் இல்லை' என மேற்சொல்லியவதனையே அநுவதித்தார். அதனால் கேடு வருதல் கூறுதற் பயன் நோக்கி. இதனான் அது செய்யாவழிக் கேடு வருதல் கூறப்பட்டது.)

***ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே***
***செல்லும்வாய் எல்லாம் செயல்.*** **33**

ஒல்லும் வகையான் – தத்தமக்கு இயலுந்திறந்தான், அறவினை ஓவாதே செல்லும்வாய் எல்லாம் செயல் – அறம் ஆகிய நல்வினையை ஒழியாதே அ∴து எய்தும் இடத்தான் எல்லாம் செய்க. (இயலுந்திறம் ஆவது – இல்லறம் பொருள் அளவிற்கு ஏற்பவும், துறவறம் யாக்கை நிலைக்கு ஏற்பவும் செய்தல். ஓவாமை, இடைவிடாமை. எய்தும் இடம் ஆவன. மனம் வாக்குக் காயம் என்பன. அவற்றால் செய்யும் அறங்கள் ஆவன. முறையே நற்சிந்தையும், நற்சொல்லும், நற்செயலும் என இவை. இதனான் அறஞ்செய்யும் ஆறு கூறப்பட்டது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மனத்துக்கண். மாசிலன் ஆதல் அனைத்தறன்*
*ஆகுல நீர பிற.* 34

மனத்துக்கண் மாசு இலன் ஆதல் - அவ்வாற்றான் அறஞ்செய்வான் தன் மனத்தின்கண் குற்றமுடையன் அல்லன் ஆக, அனைத்து அறன் - அவ்வளவே அறம் ஆவது, பிற ஆகுலநீர - அஃது ஒழிந்த சொல்லும் வேடமும் அறம் எனப்படா ஆரவார நீர்மைய, (குற்றம் தீயன சிந்தித்தல். பிறர் அறிதல் வேண்டிச் செய்கின்றன ஆகலின், 'ஆகுல நீர' என்றார். மனத்து மாசுடையன் ஆயவழி அதன்வழிய ஆகிய மொழி மெய்களால் செய்வன பயனில என்பதூஉம் பெறப்பட்டது.)

*அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்*
*இழுக்கா இயன்றது அறம்.* 35

அழுக்காறு - பிறர் ஆக்கம் பொறாமையும், அவா - புலன்கள்மேல் செல்கின்ற அவாவும், வெகுளி - அவை ஏதுவாகப் பிறர்பால் வரும் வெகுளியும். இன்னாச்சொல் - அதுபற்றி வரும் கடுஞ்சொல்லும் ஆகிய, நான்கும் இழுக்கா இயன்றது அறம் - இந்நான்கினையும் கடிந்து இடையறாது நடந்தது அறம் ஆவது. (இதனான், இவன்றோடு விரவி இயன்றது அறம் எனப்படாது என்பதூஉம் கொள்க. இவை இரண்டு பாட்டானும் அறத்தினது இயல்பு கூறப்பட்டது).

*அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது*
*பொன்றுங்கால் பொன்றாத் துணை.* 36

அன்று அறிவாம் என்னாது அறம் செய்க - 'யாம் இது பொழுது இளையம் ஆகலின் இறக்கும் ஞான்று செய்தும்' எனக் கருதாது அறத்தினை நாள்தோறும் செய்க, அது பொன்றுங்கால் பொன்றாத் துணை - அவ்வாறு செய்த அறம் உடம்பினின்றும் உயிர் போங்காலத்து அதற்கு அழிவு இல்லாத துணை ஆம். ('மற்று' என்பது அசைநிலை. 'பொன்றாத் துணை' என்றார். செய்த உடம்பு அழியவும் உயிரோடு ஒன்றி ஏனை உடம்பினுட் சேறலின். இதனான் இவ்வியல்பிற்றாய அறத்தினை நிலையாத யாக்கை நிலையின பொழுதே செய்க என்பது கூறப்பட்டது).

*அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை*
*பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை.* 37

அறுத்து ஆறு இது என வேண்டா - அறத்தின் பயன் இது என்று யாம் ஆகம அளவையான் உணர்த்தல் வேண்டா, சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை - சிவிகையைக் காவுவானோடு செலுத்துவானிடைக் காட்சியளவை தன்னானே உணரப்படும். (பயனை. 'ஆறு' என்றார், பின்னது ஆகலின், 'என' என்னும் எச்சத்தால் சொல் ஆகிய ஆகம அளவையும், 'பொறுத்தானோடு ஊர்ந்தானிடை' என்றதனால் காட்சியளவையும் பெற்றாம். 'உணரப்படும்' என்பது சொல்லெச்சம். இதனான் அறம் பொன்றாத் துணையாதல் தெளிவிக்கப்பட்டது).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்*
*வாழ்நாள் வழி அடைக்குங் கல்.* 38

வீழ் நாள் படாமை நன்று ஆற்றின் – செய்யாது கழியும் நாள் உளவாகாமல் ஒருவன் அறத்தைச் செய்யுமாயின், அஃது ஒருவன் வாழ்நாள் வழி அடைக்கும் கல் – அச்செயல் அவன் யாக்கையோடு கூடும் நாள் வரும் வழியை வராமல் அடைக்குங் கல்லாம். (ஐவகைக் குற்றத்தான் வரும் இருவகை வினையும் உள்ள துணையும், உயிர் யாக்கையோடும் கூடி நின்று, அவ்வினைகளது இருவகைப் பயனையும் நுகரும் ஆகலான், அந்நாள் முழுவதும் 'வாழ்நாள்' எனப்பட்டது. குற்றங்கள் ஐந்து ஆவன. அவிச்சை, அகங்காரம், அவா, விழைவு, வெறுப்பு என்பன. இவற்றை வடநூலார் 'பஞ்சக் கிலேசம் என்பர். வினை இரண்டு ஆவன, நல்வினை, தீவினை என்பன. பயன் இரண்டு ஆவன. இன்பம், துன்பம் என்பன. இதனால் அறம் வீடு பயக்கும் என்பது கூறப்பட்டது.

*அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்*
*புறத்த புகழும் இல.* 39

அறத்தான் வருவதே இன்பம் – இல்லறத்தோடு பொருந்தி வருவதே இன்பம் ஆவது, மற்று எல்லாம் புறத்த – அதனோடு பொருந்தாது வருவன எல்லாம் இன்பம் ஆயினும் துன்பத்தினிடத்த, புகழும் இல – அதுவேயும் அன்றிப் புகழும் உடைய அல்ல. ('ஆன்' உருபு ஈண்டு உடனிகழ்ச்சிக்கண் வந்தது, "தூங்கு கையான் ஓங்கு நடைய"

(புறநா. 22) என்புழிப் போல, இன்பம் – காம நுகர்ச்சி, அஃது ஆகுமாறு காமத்துப் பாலின் முதற்கண் சொல்லுதும். இன்பத்தின் புறம் எனவே, துன்பம் ஆயிற்று. பாவத்தான் வரும் 'பிறனில் விழைவு' முதலாயின அக்கணத்துள் இன்பமாய்த் தோன்றும் ஆயினும், பின் துன்பமாய் விளைதலின், 'புறத்த' என்றார். அறத்தோடு வாராதன 'புகழும் இல' எனவே, வருவது புகழும் உடைத்து என்பது பெற்றாம். இதனான் அறம் செய்வாரே இம்மை இன்பமும், புகழும் எய்துவர் என்பது கூறப்பட்டது).

*செயற்பால தோரும் அறனே ஒரு வாக்கு*
*உயற்பால தோரும் பழி.* 40

ஒருவற்குச் செயற்பாலது அறனே – ஒருவனுக்குச் செய்தற் பான்மையது நல்வினையே. உயற்பாலது பழியே – ஒழிதற்பான்மையது தீவினையே. ('ஒரும்' என்பன இரண்டும் அசைநிலை. தேற்றேகாரம் பின்னும் கூட்டப்பட்டது. பழிக்கப்படுவதனைப் 'பழி' என்றார். இதனான் செய்வதும் ஒழிவதும் நியமிக்கப்பட்டன).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகத்தேன்

- கலாநிதி சாம்பசிவ ஷண்முகநாத சிவாச்சார்யார் -
(சர்வதேச இந்துமத குருபீட அமைப்பாளர் - லண்டன்)

தேன் மிகவும் இனிமையானது. உலகில் உணவுப் பொருட்கள் பல உள. பால், தயிர், நெய், பழம், கிழங்கு என்பனவாதி பல்வேறு உணவுப் பண்டங்கள் யாவும் நாள் சென்றால் கெட்டுவிடும். எத்துணை உயர்ந்த பால் ஆயினும் மூன்று நாட்கள் வைத்திருந்து அதனைப் பருகவொண்ணாது. உணவுப் பொருட்கள் யாவுமே நாள் சென்றால் சுவை குன்றும், நாறும, உடம்புக்கு ஊறு செய்யும்.

## கெடாதது

ஆனால் உணவுப் பொருட்களில் ஒன்று மட்டும் எத்துணை ஆண்டுகள் கழிந்தாலும் கெட்டுப் போகாது. தன்னிலை நின்று சுவைபயக்கும். அத்தகைய உணவுப்பொருள் எது? தேன் ஒன்றுதான்! தேன் நாள் செல்லச் செல்ல புளிக்காது. தேன், என்றும் கெடாது ஒரே தன்மையாக இருப்பது. இது போலவே திருவாசகமும் ஒரு போதும் சிதையாத சிறப்புடையது.

## அழியாத் தன்மையது

தேன், தான் கெடாததோடன்றி தன்னில் ஊறவைத்த பேரீச்சம்பழம், திராட்சை, இஞ்சி முதலிய பொருட்களையும் கெடவிடாது. அது போல் திருவாசகம் தான் அழியாதது மட்டுமன்றி தன்னை ஓதுவாரையும் அழியாமல் காக்கும் திறனுடையது.

*'மறுவா நெறியளிக்கும் வாதவூர் எம்கோன்*
*திருவாசக மென்னுந் தேன்.'*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன் பித்தத்தைப் போக்கும்.மந்தத்தை தவிர்க்கும், நல்ல ரத்தத்தை நல்கும். நெடுங்காலமாக நமக்குத் தொல்லை தரும் பிறவிப் பிணியை மாற்றும் திருவாசகத்தேன்.

### நோய் தீர்க்கும்

உடம்புக்குப் பல பிணிகள் உண்டு. அப்பிணிகளை எளிதில் போக்கவல்ல மருந்து தேன். உயிருக்கு என்றும் தொடர்ந்து வரும் நோய் பிறவி. எண்ணில் காலமாக எண்ணில்லாத இடங்களில் எண்ணற்ற பருவங்களில் மாறி மாறிப் பிறந்தும் இறந்தும் வருகின்ற உயிர்களாகிய நமக்குச் சிறந்த மருத்துவராகிய வாதவூரடிகள் திருவாசகத்தேனை 656 பாடல்களில் தந்து அந்நோய் தீர அருளினார்கள்.

### அல்லல் அறுக்கும்

தொல்லையிலும் பிறவிச் சூழுந்தளை நீங்கும். தேன் மந்தத்தைத் தவிர்க்கும், திருவாசகத் தேன் அறியாமையை அகற்றும். அல்லல்கள் அனைத்தும் அறியாமையால் விளைகின்றன. அறியாமையால் விளையும் அல்லல்கள் அனந்தம். கவர் பிளந்த மரத்தொளையில் கால் நுளைத்துக் கொண்டு, குரங்கு ஆப்பை அசைத்த எடுத்துவிட்டது.பிளந்திருந்த மரம் நெருங்கியவுடன் அவ்வானரத்தின் வேதனைக்கு எல்லையுண்ணுடா? ஏன், இத்துன்பம் அதற்கு எய்தியது? அறியாமையால் வந்தது. அறியாமையால் வந்தது.இங்ஙனம் மக்கள் அறியாமையால் இடர்கள் எய்துகின்றனர். இத்தகைய அறியாமையை அறவே களையவல்லது திருவாசகத்தேன்.

### ஆனந்தம் அளிக்கும்

தேன் நல்ல இரத்தத்தைத் தரும். மேலும் பிறவி நோயும் அறியாமையும் அகன்றவுடன் சிவானந்தம் விளையும். அந்த ஆனந்தத்தையளிக்கும் திருவாசகத்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தொல்லை யிரம்பிறவிச் சூழுந்தளை நீக்கி
அல்லல் அறுத்தானந்த மாக்கியதெ - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகமென்னும் தேன்."

## தேனும் திருவாசகமும்

திருவாசகத்தில் தேன் என்ற இனிய சொல் அதிகம் வருகின்றது. "இறைவன், அடியார் சிந்தனையுள் தேன் போல் கலந்து நின்று பிறப்பை ஒழிப்பான்" என்கிறார்.

"சிறந்து அடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்."

"தேசனே தேனார் அமுதே சிவபுரனே"

- சிவபுராணம்

"தேனமர் சோலை திருவாரூரில்
ஞானந் தன்னை நல்கிய நன்மையும்"

- கீர்த்தித் திருவகவல்

"ஆற்றேனாக அவையவவஞ் சுவைதரு
கோற்றேன் கொண்டு செய்தனன்."

"குரம்பை கொண்டுஇன் தேன் பாய்த்தி
கருணை வான்தேன் கலக்க"

- திருவண்டப்பகுதி

"இன்ன தென்றறிளாத தேனே."
"தேனிலாவிய திருவருள் புகுந்து."

- திருச்சதகம்

* "வந்திங்கு ஆட்கொண்ட தேனே"
* "தேனே அமுதே சிந்தைக் கரியானே"
* "தேனே அமுதே கரும்பின் தெளிவே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* "தேன்வந் தமுதின் தெளிவின்"
* "தேனாய் அமுதமாய்த் தீங்கரும்பின் கட்டியாய்"
* "நந்தாத் தேனைப் பழச் சுவையை"
* "தேனுந்து சேவடிக்கே"
* "தேன் தங்கி தித்தித்து அமுதூறி"
* "கொற்றேன் என்கோ எனக்கு"
* "அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன் சொரியும்"
* "உவப்பிலா ஆனந்தமாய் தேனினைச் சொரிந்து"
* "தேனா யின்னமுதாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்."

இவ்வாறு திருவாசகத்தில் தேன் என்ற சொல் ஆங்காங்கே பயிலப்படுகின்றது. விரிவஞ்சிச் சிலவற்றை மட்டும் கண்டு குறித்தேன்.

## வாதவூர் வண்டு

வண்டு பல்வேறு மலர்களிலிருந்து தேனையெடுப்பது போல் வேதாகம உபநிடதங்களிலிருந்த வாதவூரராகிய வண்டு திருவாசகமாகிய தேனை எடுத்து நமக்கு வழங்கியருளினார்.

திருமூலர், "தேனுக்குள் இன்பஞ் செறிந்தாப் போல் ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந்தானே" என்றும், அருணகிரிநாதர், "உண்ட நெஞ்சறி தேனே வானோர் பெருமாளே" என்றும் தேனைப்பற்றிக் கூறியுள்ளார். பல மலர்களிலிருந்து எடுக்கப்பெற்ற தேன் எவ்வாறு உடலுக்குச் சிறந்த உணவாக அமைந்துள்ளதோ, அவ்வாறு திருவாசகத்தேன் உயிருக்கு ஒப்பற்ற உணவு என உணர்க.

ஆகவே, அன்பர்கள் அனைவரும் பிறவி நோய் தீரும் பொருட்டுத் திருவாசகத் தேனை நாடோறும் பருகி, உருகி அருள் பெருகிப் பெருநலம் பெற்று உய்வார்களாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜன்மநக்ஷத்திரம் (பிறந்த நக்ஷத்திரம்) அதற்கு
1 ,19வது நக்ஷத்திரங்கள் ஜன்மத்திரயங்களாகும்.
ஜன்மத்திரயங்களில் திருமணம்,புதுமனை பிரவேசம்
போன்ற சுபகாரியங்கள் விலக்கப்பட வேண்டும்.
*********************************************************************

| ஜன்ம நக்ஷத்திரம | 10வது நக்ஷத்திரம் | 19வது நக்ஷத்திரம் |
|---|---|---|
| 01 அஸ்வினி | மகம் | மூலம் |
| 02 பரணி | பூரம் | பூராடம் |
| 03 கார்த்திகை | உத்தரம் | உத்தராடம் |
| 04 ரோஹிணி | அத்தம் | திருவோணம் |
| 05 மிருகசீரிஷம் | சித்திரை | அவிட்டம் |
| 06 திருவாதிரை | சுவாதி | சதயம் |
| 07 புனர்பூஷம் | விசாகம் | பூரட்டாதி |
| 08 பூஷம் | அனுஷம் | உத்திரட்டாதி |
| 09 ஆயில்யம் | கேட்டை | ரேவதி |
| 10 மகம் | மூலம் | அஸ்வினி |
| 11 பூரம் | பூராடம் | பரணி |
| 12 உத்தரம் | உத்தராடம் | கார்த்திகை |
| 13 அத்தம் | திருவோணம் | ரோகிணி |
| 14 சித்திரை | அவிட்டம் | மிருகசீருஷம் |
| 15 சுவாதி | சதயம் | திருவாதிரை |
| 16 விசாகம் | பூரட்டாதி | புனர்பூசம் |
| 17 அனுஷம் | உத்திரட்டாதி | பூசம் |
| 18 கேட்டை | ரேவதி | ஆயில்யம் |
| 19 மூலம் | அஸ்வினி | மகம் |
| 20 பூராடம் | பரணி | பூசம் |
| 21 உத்தராடம் | கார்த்திகை | உத்தரம் |
| 22 திருவோணம் | ரோகிணி | அத்தம் |
| 23 அவிட்டம் | மிருகசீருஷம் | சித்திரை |
| 24 சதயம் | திருவாதிரை | சுவாதி |
| 25 பூரட்டாதி | புனர்பூஷம் | விசாகம் |
| 26 உத்தரட்டாதி | பூஷம் | அனுஷம் |
| 27 ரேவதி | ஆயில்யம் | கேட்டை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்ஜோதி வினா - விடை

**1. வினா :- முப்பொருள் எவை?**

**விடை :-** 1. பசு 2. பதி 3. பாசம்

**2. வினா :- மும்மலங்கள் எவை?**

**விடை :-** 1. ஆணவமலம்
2. கன்மமலம்
3. மாயா மலம்

**3. வினா :- மும்மூர்த்திகள் யாவர்?**

**விடை :-** 1. பிரம்மா 2. விஷ்ணு 3. உருத்திரன்

**4. வினா :- முச்சக்திகள் யாவர்?**

**விடை :-** 1. இச்சா சக்தி
2. கிரியா சக்தி
3. ஞானா சக்தி

**5. வினா :- முப்பெரும் தேவியர் யாவர்?**

**விடை :-** 1. துர்க்கா 2. லக்ஷ்மீ 3. ஸரஸ்வதி

**6. வினா :- முக்கரணங்கள் (த்ரிகரணம்) எவை?**

**விடை :-** 1. மனம் 2. மொழி 3. மெய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**7. வினா :- முக்குணங்கள் எவை?**

**விடை :-** 1. தமோகுணம் (தாமதம்) – சோம்பல்
2. ரஜோகுணம் (ராஜதம்) – கோபம்
3. சாத்வீககுணம் (சாந்தம்) – அமைதி

**8. வினா :- நால் வேதங்கள் எவை?**

**விடை :-** 1. இருக்வேதம் 3. சாம வேதம்
2. யசுர் வேதம் 4. அதர்வண வேதம்

**9. வினா :- நாற்பாதங்கள் எவை?**

**விடை :-** 1. சரியை 3. யோகம்
2. கிரியை 4. ஞானம்

**10. வினா :- சமய குரவர்கள் நால்வர் யாவர்?**

**விடை :-** 1. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் (சம்பந்தர்)
2. திருநாவுக்கரசமூர்த்தி நாயனர் (அப்பர்)
3. சுந்தரமூர்த்தி நாயனர் (சுந்தரர்)
4. மாணிக்கவாசக சுவாமிகள் (மணிவாசகர்)

**11. வினா :- நால்வகை முத்திகள் எவை?**

**விடை :-** 1. சாலோப முத்தி 3. சாரூப முத்தி
2. சாமீப முத்தி 4. சாயுஜ்ய முத்தி

**12. வினா :- பஞ்சபூதங்கள் எவை?**

**விடை :-** 1. ப்ருதுவி (நிலம்) 4. வாயு (காற்று)
2. அப்பு (நீர்) 5. ஆகாசம் (வெளி)
3. தேயு (நெருப்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**13. வினா :- பஞ்ச கவ்யம் எவை?**

**விடை :-** 1. பால் 4. கோசலம் (பசுவின் சிறுநீர்)
2. தயிர் 5. கோமயம் (சாணம்)
3. நெய்

**14. வினா :- இறைவனின் பஞ்சகிருத்தியங்கள் எவை?**

**விடை :-** 1. படைத்தல் 4. மறைத்தல்
2. காத்தல் 5. அருளல்
3. அழித்தல்

**15. வினா :- பஞ்ச ப்ரம்ம மந்திரங்கள் எவை?**

**விடை :-** 1. ஈசானாய நம: 4. வாமதேவாய நம:
2. தத்புருஷாய நம: 5. சத்யோ ஜாதாய நம:
3. அகோராய நம:

**16. வினா :- பஞ்ச யக்ஞங்கள் எவை?**

**விடை :-** 1. பிரம்ம யக்ஞம் 4. பிதுர் யக்ஞம்
2. தேவ யக்ஞம் 5. மானுட யக்ஞம்
3. பூத யக்ஞம்

**17. வினா :- பஞ்சாக்ஷர மந்திரம் எவை?**

**விடை :-** நமசிவாய
1. ந 4. வா
2. ம 5. ய
3. சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**18. வினா :- முருகப்பெருமானின் ஆறு படைவீடுகள் எவை?**

**விடை :-** 1. திருச்செந்தூர் (செந்தூர்) 4. திருவாவினன்குடி
2. திருப்பரங்குன்றம் 5. திருவேரகம
3. பழமுதிர்ச்சோலை 6. திருத்தணி

**19. வினா :- ஆறு ஆதாரஸ்தானங்கள் எவை?**

**விடை :-** 1. மூலாதாரம் 4. அனாகதை
2. ஸ்வாதிஷ்டானம் 5. விசுக்தி
3. மணிபூரகம் 6. ஆக்ஞை

**20. வினா :- வேதத்தின் அங்கங்கள் ஆறு எவை?**

**விடை :-** 1. சிக்ஷை 4. நிருத்தம்
2. வியாகரணம் 5. ஜோதிஷம்
3. சந்தஸ் 6. கல்ப்பம்

**21. வினா :- அறு சுவைகள் எவை?**

**விடை :-** 1. இனிப்பு 4. துவர்ப்பு
2. உறைப்பு 5. உபர்ப்பு
3. புளிப்பு 6. கைப்பு

**22. வினா :- ஆறு எழுத்தாகிய ஷடாக்ஷரம் எவை?**

**விடை :-** 1. ச 4. ண
2. ர 5. ப
3. வ 6. வ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**23. வினா :- கந்தபுராணத்தின் ஆறு காண்டங்கள் எவை?**

**விடை :-**
1. உற்பத்தி காண்டம்
2. அசுர காண்டம்
3. மஹேந்திர காண்டம்
4. யுத்த காண்டம்
5. தேவ காண்டம்
6. தக்ஷ காண்டம்

**24. வினா :- 12 மாதத்தில் வரும் ஆறு ருதுக்கள் எவை?**

**விடை :-**
1. வசந்தருது (சித்திரை–வைகாசி)
2. க்ரீஷ்மந்தருது (ஆனி–ஆடி)
3. வருஷருது (ஆவணி–புரட்டாதி)
4. சரத்ருது (ஐப்பசி–கார்த்திகை)
5. ஹேமந்தருது (மார்கழி–தை)
6. சிசிரருது (மாசி–பங்குனி)

**25. வினா :- ஆறு அத்வாகள் எவை?**

**விடை :-**
1. மந்திரம்
2. புவனம்
3. வர்ணம்
4. தத்துவம்
5. கலை
6. பதம்

**26. வினா :- ஸ்கந்த ஷஷ்டி விரத நாட்கள் ஆறு எவை?**

**விடை :-**
1. பிரதமை
2. துதியை
3. த்ருதியை
4. சதுர்த்தி
5. பஞ்சமி
6. ஷஷ்டி

**27. வினா :- ஸப்த ரிஷிகள் யாவர்?**

**விடை :-**
1. காஸ்பரிஷி
2. அத்ரி ரிஷி
3. பாரத்வாஜ ரிஷி
4. விஸ்வாமித்ர ரிஷி
5. கௌதம ரிஷி
6. ஜமதக்னி ரிஷி
7. வஸிஷ்ட ரிஷி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**28. வினா :- ஸப்த புண்ணிய நதிகள் எவை?**

**விடை :-** 1. கெங்கா
2. யமுனா
3. கோதவரி
4. சரஸ்வதி
5. நிர்மதா
6. சிந்து
7. காவேரி

**29. வினா :- ஸப்த லோகம் எவை?**

**விடை :-** கீழ் உலகம்
1. அதல
2. விதல
3. நிதல
4. சுதல
5. ரசாதல
6. மஹாதல
7. பாதாளம்

மேல் உலகம்
1. பூலோகம்
2. புவர்லோகம்
3. சுவர்லோகம்
4. மகர்லோகம்
5. ஜனர் லோகம்
6. தபோலோகம்
7. சத்யலோகம்

**30. வினா :- ஸப்த தாதுக்கள் எவை?**

**விடை :-** 1. தோல்
2. இரத்தம்
3. மாமிசம்
4. கொழுப்பு
5. எலும்பு
6. மஜ்ஜை
7. தக்லம்

**31. வினா :- அஷ்ட லக்ஷ்மீகள் யாவர்?**

**விடை :-** 1. தனலக்ஷ்மீ
2. தான்ய லக்ஷ்மீ
3. வீர்ய லக்ஷ்மீ
4. விஜய லக்ஷ்மீ
5. நித்ய லக்ஷ்மீ
6. சத்ய லக்ஷ்மீ
7. சந்தான லக்ஷ்மீ
8. சௌபாக்ய லக்ஷ்மீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**32. வினா :- அஷ்ட ஐஸ்வர்யங்கள் எவை?**

**விடை :-**
1. பதவி
2. நன்மக்கள்
3. சுற்றத்தார்
4. பொன்
5. நவரெத்தினமணிகள்
6. தான்யங்கள்
7. வாகனம்
8. பணியாட்கள்

**33. வினா :- அஷ்ட திக்பாலகர்கள் (திசை எட்டு) எவை?**

**விடை :-**
1. இந்திரன்
2. அக்னி
3. யமன்
4. நிருதி
5. வருணன்
6. வாயு
7. குபேரன்
8. ஈசானன்

**34. வினா :- அஷ்ட சூர்ணம் எவை?**

**விடை :-**
1. சுக்கு
2. மிளகு
3. திப்பிலி
4. ஓமம்
5. சீரகம்
6. கருஞ்சீரகம்
7. இந்துப்பு
8. பெருங்காயம்

**35. வினா :- அஷ்ட கந்தம் எவை?**

**விடை :-**
1. அகில்
2. சந்தணம்
3. குங்குமப்பூ
4. மஞ்சள்
5. கஸ்தூரி
6. கோரோசனை
7. விளாமிச்சை (இலாமிச்சை)
8. குருவி வேர்

**36. வினா :- அஷ்ட மங்களம் எவை?**

**விடை :-**
1. கண்ணாடி
2. பூர்ணகும்பம்
3. மயில்
4. இரட்டை சாமரை
5. ஸ்ரீவத்ஸம்
6. ஸ்வஸ்திகம்
7. சங்கு
8. தீபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**37. வினா :- அஷ்ட பந்தனதில் அடங்குபவை எவை?**

**விடை :-** 1. சுக்கான் 5. தேன்மெழுகு
2. செங்காவி 6. சாதிலிங்கம்
3. கொப்பரக்கு 7. செம்பஞ்சு
4. குங்குலியம் 8. வெண்ணை

**38. வினா :- நவரெத்தினங்கள் எவை?**

**விடை :-** 1. மாணிக்கம் 6. நீலம்
2. முத்து 7. வஜ்ரம்
3. பவளம் 8. கோமேதகம்
4. மரகதம் 9. வைடூர்யம்
5. புஷ்பராகம்

**39. வினா :- நவதாணியங்கள் எவை?**

**விடை :-** 1. கோதுமை 5. கடலை 9. கொள்ளு
2. நெல் 6. மொச்சை
3. துவரை 7. எள்ளு
4. பயறு 8. உழுந்து

**40. வினா :- நவக்கிரகங்கள் எவை?**

**விடை :-** 1. சூரியன் 5. குரு 9. கேது
2. சந்திரன் 6. சுக்கிரன்
3. அங்காரகன் 7. சனீஸ்வரன்
4. புதன் 8. ராகு

**41. வினா :- அம்பிகையால் சம்ஹாரம் செய்யப்பெற்ற ஒன்பது அசுரர்கள் யாவர்?**

**விடை :-** 1. மதுகைடபன் 6. நிசும்பன்
2. தூம்ரலோசனன் 7. சண்டமுண்டன்
3. ரக்த பீஜன் 8. மஹிஷன்
4. கும்பன் 9. மஹிஷாசுரன்
5. சும்பன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**42. வினா :- நவமாருதி - 9 அனுமன் பெயரென்ன?**

**விடை :-**
1. தீர மாருதி
2. பால மாருதி
3. சஞ்ஜீவி மாருதி
4. யோக மாருதி
5. பக்த மாருதி
6. த்யான மாருதி
7 வீர மாருதி
8. பஜன மாருதி
9. பவ்ய மாருதி

**43. வினா :- நவராத்திரி விரதம் அனுஷ்டிக்கும் காலம் எது?**

**விடை :-** புரட்டாதி மாதத்தில் வரும் வளர்பிறை பிரதமை முதல் நவமி வரையுள்ள ஒன்பது திதிகளைக் கொண்ட ஒன்பது நாள்களாகும்.

**44. வினா :- நவராத்திரி விரதம் சில வருடங்களில் 8 நாளில் வருகிறது ஏன்?**

**விடை :-** நவராத்திரி விரதம் 9 திதிகளும் 8 நாட்களில் வந்தால் அவ்வாறு அனுஷ்டிக்கப்படுகிறது. பிரதமை முதல் நவமிவரையுள்ள ஒன்பது திதிகளைக் கொண்டது தான் நவராத்திரி. (9 திதிகள் கொண்ட இரவுகள்)

**45. வினா :- மஹாவிஷ்ணுவின் தச அவதாரங்கள் (10) எவை?**

**விடை :-**
1. மச்ச அவதாரம்
2. கூர்ம அவதாரம்
3. வராக அவதாரம்
4. வாமன அவதாரம்
5. நரசிம்ம அவதாரம்
6. இராம அவதாரம்
7 பலராம அவதாரம்
8. கிருஷ்ண அவதாரம்
9. பரசுராம அவதாரம்
10. கல்வி அவதாரம்

**46. வினா :- தச திக்பாலகர்கள் யாவர்?**

**விடை :-**
1. இந்திரன்
2. அக்னி
3. யமன்
4. நிருதி
5. வருணன்
6. வாயு
7 குபேரன்
8. ஈசானன்
9. பிரம்மா
10. விஷ்ணு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



வசதி குறைந்த மாணவ - மாணவிகளுக்கான

# கல்வி மேம்பாட்டு நிதியம்

## சர்வதேச இந்துமத குருபீடம்

அன்பான அறிஞர்களே! பெரியோர்களே!

மனித வாழ்வில் கல்வி எத்தகைய முக்கியத்துவம் என்பது அனைவரும் அறிந்ததே. அந்த வகையில் பெற்றோர் இல்லாத மாணவர்களுக்கும், வசதி குறைந்த மாணவர்களுக்கும் அவர்களது மேற்படிப்பிற்காக எமது **சர்வதேச இந்துமத குருபீடம் கல்வி மேம்பாட்டு நிதியம்** ஆரம்பித்து கடந்த ஏழு ஆண்டுகளாக வசதி குறைந்த மாணவர்களுக்கு அவர்களின் பெயரில் வங்கியில் பணம் வைப்புச் செய்து வருவது யாவரும் அறிந்ததே.

சுமார் 350 மாணவர்களுக்கு நாம் நிதியத்தின் மூலம் நிதி உதவி செய்து வருகிறோம்.

இந்த நல்ல பணிக்கு நல்ல உள்ளம் கொண்ட தாங்களும் எமது நிதியத்திற்கு நிதி உதவி செய்து மாணவர்களின் எதிர்கால கல்விக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். நன்றி.

*பணம் அனுப்ப வேண்டிய முகவரி*

**கல்வி மேம்பாட்டு நிதியம்**
**S. I. S. Sivachcaryar**
**INTERNATIONAL HINDU GURU PEEDAM**
46, 7th Lane, Colombo - 13, Sri Lanka.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சாமியே சரணம் ஐயப்பா

# "நம்பினார் கெடுவதில்லை"

## N.M. நம்பியார் சுவாமிகள்

(குருசாமி)

சாமியே சரணம் ஐயப்பா என்கின்ற தாரக மந்திரத்தை உச்சரிக்கும் போதே எமது உள்ளத்தில் அந்த ஹரிஹர சுதனாகி ஐயன் ஐயப்பன் குடி கொண்டிடுவான். நாபிக்கமலத்திலிருந்து எழும்பும் இந்த ஒலியானது எமது உள்ளத்தையும் உடலையும் தூய்மைப்படுத்திவிடும்.

காமம், குரோதம், லோபம், மோகம், மதம், ஆச்சரியம் என்னும் தீயவற்றை அகற்றி அன்பு, பண்பு, தியாக சிந்தனை, தாய், தந்தை, குரு, பெரியோரை வணங்கும் பணிவு ஆகிய நற்குணங்களை ஏற்படுத்தக்கூடிய பெரும் சக்தி கொண்டது சாமியே சரணம் ஐயப்பா என்னும் திவ்ய மந்திரம். எத்தனை (வயதுவரை) ஆண்டுகள் வாழ்ந்தார் என்பது முக்கியமில்லை. வாழ்ந்த காலத்தில் நாட்டிற்கும், சமயத்திற்கும், சமூகத்திற்கும் எத்தகைய பணி செய்தார் என்பதே முக்கியம். அது போல் எத்தனை முறை சபரிமலைக்கு யாத்திரை போனார் என்பதை விட, யாத்திரைக்காலத்தில் கன்னி ஐயப்பன்மார் எத்தனை பேரை அழைத்துச் சென்று ஐயப்பனின் திவ்ய தரிசனத்திற்கு ஆளாக்கினார் என்பதே சிறந்த புண்ணியம்.

மாலையணிந்த நாள் முதல் குருசுவாமியின் அருட்கட்டளையை மனநிறைவுடன் ஏற்று நெறிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். மாலையணிந்த ஐயப்பனுக்கு தாயாகவும், தந்தையாகவும், குருவாகவும் இருப்பவர் குருசாமியே. எனவே குருசாமியின் வழிகாட்டலில் இறையருளைப் பெறுதல் ஐயப்ப விரத தத்துவம்.

எனவே சுவர்ணபூமி, புண்யபூமி எனப் போற்றப்படும் இலங்கைத்திருநாட்டில் ஐயன் ஐயப்பனின் புகழ் பரப்பும் அருள் ஞான பீடமாகத்திகழும் சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம் கடந்த 22 வருடங்களாக பீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் நூற்றுக்கணக்கான (கன்னி ஐயப்பன் சுவாமிகளையும்) ஐயப்பன் பக்தர்களுக்கு விரத முத்திரை மாலை அணிவித்து, விரத நெறி முறைகள் தவறாது, சபரிமலைப் புனித யாத்திரை மேற்கொண்டு வருவது அறிந்து மனநிறைவு கொள்ளுகின்றேன்.

எமது இல்லத்திற்கு வருகை தந்த இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாஸக்குருக்களும், அவருடன் சில பக்தர்களும் இலங்கை வர வேண்டும் என்று அன்பான அழைப்பு விடுத்தார்கள். ஐயன் அழைத்தால் இலங்கை சபரிமலை சாஸ்தாபீடத்திற்கு நிச்சயம் ஒரு நாள் வருகின்றேன் எனக் கூறி எல்லாம் வல்ல சபரிகிரிவாசன் ஐயனைப் பிரார்த்திக்கின்றேன். எனக்கு எல்லாம் ஐயப்பனே என்ற நம்பிக்கை உடையவன்.

*"நம்பினார் கெடுவதில்லை" - இது நான்கு மறைதீர்ப்பு*

சென்னை - 17

இவ்வண்ணம்
எம். என். நம்பியார்
(ஐயப்பன் அடியவன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# குருஜியின் சேவைகள்

அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடாதிபதி ஐயப்பதாஸக்குருக்கள் என்ற தனிமனிதனின் சிந்தனையிற் கருவாகி உருவாகிய சாஸ்தாபீடம் இன்று தனது 22ஆவது ஆண்டு நிறைவைக்கொண்டாடியது. இலங்கைத்திருநாட்டில் ஐயப்பன் வழிபாடு, சபரிமலை யாத்திரை, 48 நாட்களுக்கு மகரஜோதி மண்டல பூஜைப்பெருவிழா என்பவற்றின் மூலம் இலங்கைத் திருநாட்டில் ஐயப்பன் புகழைப்பரப்பி அன்று முதல் இன்று வரை வருடம் தோறும் நூற்றுக்கு மேற்பட்ட அடியார்களுக்கு மாலை அணிவித்து, சபரிமலை ஐதீக முறைப்படி விரத நெறி முறைகளைக் கடைப்பிடிக்க வைத்து அடியார்களை புனித யாத்திரைக்கு அழைத்துச் சென்று ஐயப்பனின் தரிசனம் செய்வித்து, அடியார்களுக்கு பரிபூரண அருளைப் பெறுவதற்கு வழிகாட்டியாகத் திகழ்பவர்.

இலங்கைத் திருநாட்டில் ஐயப்பனுடைய வழிபாட்டு முறைகளை கேரள ஐதீகப்படி கணபதி ஹோமக் துவாஜாரோஹனத்துடன் ஆரம்பமாகி சனிக்கிழமைகள் தோறும் விசேட மலையாள பூஜை, மஹிஷி சம்ஹாரம் என்னும் வேட்டைத்திருவிழா, மாளிகை புரத்து மஞ்சமாதா அம்மன் பூஜை, நாகராஜா பூஜை, பால்க்காவடிப்பெருவிழா, தீபஜோதித்திருவிழா (தீச்சட்டி), ரதபவனிப் பெருவிழா, சங்கமத்தீர்த்தோற்சவம், காவல்த்தெய்வமாகிய கருப்பண்ணா சாமி பூஜை இறைவனுடைய திருவருளைப்பெறுவதற்கு குருவருள் வேண்டி குருசுவாமி பாதப்பூஜை, குருசுவாமி பீடாரோஹன விழா, மலை யாத்திரை செல்லும் ஐயப்ப சுவாமிகளுக்கு அடியார்களின் பாதநமஸ்காரம் செய்வித்து, மலையாத்திரை புறப்படுவதற்கான இருமுடி பூசைக்கான கணபதி ஹோமம் செய்து, மலையாத்திரை புறப்பட்டு கல்லும், முள்ளும், காடும், மேடும் கடந்து அடியார்கள் ஐயப்பனின் பதினெட்டுப்படியேறி மனமுருகி நெய் அபிஷேகம் செய்வித்து, ஆனந்தக்களிப்போடு மகரஜோதி தரிசனம் செய்வித்து, வரும் பெருமை எங்கள் குருஜி ஐயப்பதாஸன் அவர்களையே சாரும். ஈழமணித்திருநாட்டில் உயிருள்ள நாகபாம்புக்கு நாக பூஜை, பாலபிஷேகம், ரதபவனிப்பெருவிழா என்பன வேறு எங்கும் காணமுடியாத சாஸ்தாபீடத்திற்கு மட்டுமே உரிய சிறப்பம்சமாகும்.

மகரஜோதி விழாவில் நடைபெறுகின்ற மஞ்சமாதா பூஜையில் 850 ற்கு மேற்பட்ட சுமங்கலி, கன்னிப்பெண்களுக்கு அம்பாளின் பிரசாதமாக மஞ்சள்க் குங்குமத்துடன் ஆடை, அணிகலன்கள் வழங்கப்படுவது சாஸ்தாபீடத்தின் மற்றொரு சிறப்பம்சமாகும். மாதந்தோறும் பிரதி சனிக்கிழமைகளில் ஐயப்பனின் வழிபாடும், செவ்வாய்க்கிழமைகளில் இடம் பெறும் இராகு கால துர்க்கா பூஜையும், ஆவணி மாத ஸ்ரீ வரலக்ஷ்மி பூஜையில் ஐந்நூறுக்கு மேற்பட்ட சுமங்கலிப்பெண்களுக்கு தீப பூஜை செய்வித்து, அவர்களுக்கு ஸ்ரீ வரலக்ஷ்மியின் பிரசாதமாகிய மஞ்சள்க்குங்குமம், ஆடையணிகலங்கள் வழங்கப்பட்டு வருவது சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

எங்கள் குருசுவாமி என்ன செய்கிறார்? எப்படிச்செய்கிறார்? அதை எப்பொழுது? எப்படிச் செய்வாரோ? தெரியாது. ஆனால் ஏதோ நல்லவைகளைச் செய்து கொண்டு இருக்கிறார்.

இன்று இலங்கையில் சபரிமலை யாத்திரைக்கு அழைத்துச் செல்லும் பல குருசுவாமிகள் இருக்கிறார்கள். பொ. ரவீந்திரன் (ஆட்டுப்பட்டித்தெரு), சண்முகநாதன் (Nido Video), செந்தில்நாத மணிக்குருக்கள், திரு. சண்முகசுந்தரம் (சுரேக்கா ஜுவல்லர்ஸ்), எஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதாபரன் (செட்டியார் தெரு), சாம் ஜெகதீஸ்வரக்குருக்கள், கி. ஹரிஹரசுதசர்மா (கோண்டாவில்), சண்முகநாதன் (அப்புத்தளை), எஸ். குமாரரட்ணம் (ஜம்பட்டா வீதி), ராமையா பாலசுப்பிரமணியம், திரு. மோகன் ஆகியோர் சாஸ்தாபீடத்தின் எங்கள் குருசுவாமியின் வழிகாட்டலிலேயே மலை சென்று வந்தவர்கள் என்ற பெருமை சாஸ்தாபீடத்திற்கே உண்டு. மேலும் வசதி குறைந்த மாணவர்களுக்கு வருடம் தோறும் பாடசாலை உபகரணங்கள், அப்பியாசக்கொப்பிகள் வழங்கப்படுவதும், மாணவர்கள் 350 பேரின் பேரில் வங்கிக்கணக்கில் ஒரு தொகை வைப்பிலிடப்பட்டு அவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு உந்து சக்தியாக விளங்கி வீறு நடைபோடுகின்றது.

இந்நாட்டின் முதலாவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, ரணசிங்க பிரேமதாஸ, டீ. பீ. விஜயதுங்க, இன்றைய ஜனாதிபதி திருமதி. சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்க போன்ற நான்கு ஜனாதிபதிகளுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்து அவர்களின் அன்புக்கு பாத்திரமானவராக இருந்தார். மேலும் இலங்கையின் முன்னாள் பிரதம மந்திரிகளாகிய சிறிமாவோ பண்டாரநாயக, இந்நாள் பிரதம மந்திரி திரு. ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் பாதுகாப்பு அமைச்சர்களான லலித் அத்துலத் முதலி, ரஞ்சன் விஜயரட்ன மற்றும் சௌமிய மூர்த்தி தொண்டமான் அன்றைய சுதேச வைத்திய அமைச்சர் டபிள்யூ. ஜே. எம். லொக்கு பண்டார, செல்லையா ராஜதுரை, மேல் மாகாண முதலமைச்சர் சுசில் முனசிங்க, முன்னாள் ராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி உட்பட பல அரசியல் பிரமுகர்களின் அன்புக்குப் பாத்திரமானவர்.

மேலும் கடந்த 22 ஆண்டுகளில் (2213) இரண்டாயிரத்து இருநூற்று பதின் மூன்று பக்தர்களுக்கு மாலை அணிவித்து, மலை யாத்திரைக்கு அழைத்துச் சென்ற பெருமை சாஸ்தாபீடத்திற்கு உரியதாகும். அத்துடன் ஆன்மீக பணி புரிகின்ற சிவாச்சாரியார்கள், ஆலய அறங்காவலர்கள், தவில் நாதஸ்வரக் கலைஞர்கள், சமய அறிஞர்கள், இயலிசை நாடகக் கலைஞர்கள், ஆசிரியர்களென பல்துறை சார்ந்த பிரமுகர்கள் இந்நாட்டின் வேறெந்த சமய நிறுவனமும் நினைத்துப் பார்க்க முடியாத அளவில் ஆயிரத்து நூற்று என்பத்து ஐந்து பிரமுகர்களுக்கு பொன்னாடை போர்த்தி சிறப்புப் பட்டம் வழங்கியமை எங்கள் குருஜி அவர்களுக்கு மட்டுமே உள்ள சிறப்பம்சம் எனில் அது மிகையல்ல.

இவை ஐயப்பதாஸக்குருக்களின் செயல்த்திறனின் ஒரு பக்கமே. நாணயத்திற்கு இரு பக்கங்கள் இருப்பது போல் ஐயப்பதாஸக்குருக்களின் மறுபக்கம் - இவ்வாறு ஆயிரக்கணக்கில் பிரமுகர்களைப்பாராட்டி கௌரவித்த பீடாதிபதி அவர்கள் இந்துமதத்திற்கும், தமிழ் மொழிக்கும் அபகீர்த்தி ஏற்படுத்தக்கூடிய வகையில் சில காரியங்களை செய்ய முற்பட்ட லண்டன் மெய்கண்டார் ஆதினம் சிவநந்தி அடிகள், பழனி சாது சுவாமிகள், முன்னாள் இந்துக்கலாச்சார அமைச்சர் பி. பி. தேவராஜ், சௌமியமூர்த்தி தொண்டமான், இந்துக்கலாச்சாரத்திணைக்களம், அமைச்சர் டக்லஸ் தேவானந்தா, இந்து சமய விவகார அமைச்சர் தியாகராஜா மகேஸ்வரன் உட்பட பலரின் தவறுகளைச் சுட்டிக்காட்டி நெஞ்சுத்துணிவுடன் கண்டனக்குரலெலுப்பி சுட்டிக்காட்டி, தட்டிக்கேட்டு தொடர்ந்தும் செயற்படும் சிறப்பு பீடாதிபதிக்கே உரியதாகும். இலங்கையில் மட்டுமல்லாமல் இந்தியா, மலேசியா, சுவிஸ்சலாண்ட், ஜேர்மனி, லண்டன் போன்ற உலக நாடுகளுக்குச் சென்று ஐயப்பன் பூஜை, ஆன்மீக உரைகளைத் தொடர்ந்தும் நடாத்தி வருபவர். சாஸ்தாபீடத்தின் பணிகளுடன் மட்டும் நின்றுவிடாமல் சர்வதேச இந்துமதம் என்னும் அமைப்பை ஸ்தாபித்து அதன் பீடாதிபதியாக விளங்குகிறார். "உலகம் ஆயிரம் சொல்லட்டும் எனக்கு நானே நீதிபதி" என்ற ரீதியில் வாழந்து வரும் பீடாதிபதி அவர்கள் பல்லாண்டு நீடூழி வாழ வேண்டி எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து அமைகிறேன்.

N. S. மோகன் நாயுடு J. P.
கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவியின் அறுபத்து நான்கு சக்தி பீடங்கள்

1. மாத்ரு புரம் – ரேணுகா பீடம்
2. கொல்லாபுரம் – லக்ஷமி பீடம்
3. துளஜாபுரம – சப்தச்ருங்க பீடம்
4. இங்குளை – ஜவாலாமுகீ பீடம்
5. ஸ்ரீ காசி – அன்னபூர்ணா பீடம்
6. ரக்த தந்த்ரிகை – விந்த்யாசல பீடம்
7. ரக்த தந்த்ரிகை – துர்கா பீடம்
8. சாகம்பரீ – ப்ராமீரி பீடம்
9. மதுரை – மீனாட்க்ஷி பீடம்
10. நேபாளம் – ரக்ஷய காளீ பீடம்
11. ஸ்ரீ நகரம் – சாம்பு நகேச்வரி பீடம்
12. நிலபர்வதம் – நீலாம்பரி பீடம்
13. ஸ்ரீ சந்திரகலை – கௌசிகீ பீடம்
14. ஸ்ரீ காஞ்சி – காமிக்ஷி பீடம்
15. வைத்ய நாதம் – ஜ்வாலா பீடம்
16. சைனா – நீலசரஸ்வதி பீடம்
17. வேதாரண்யம் – ஏகாமபர பீடம்
18. வேதாரண்யம் – சுந்தரீ பீடம்
19. மஹாசலம் – யோகேஸ்வர பீடம்
20. ஹிதய பர்வதம் – மாதேவீ பீடம்
21. மணித்வீபம் – புவனேஸ்வரி பீடம்
22. மணித்வீபம் – திரிபுரபைரவீ பீடம்
23. அமரேசம் – சண்டிகா பீடம்
24. ப்ரபாஸம் – புக்ஷகரேக்ஷணி பீடம்
25. புக்ஷ்கரம் – காயத்ரீ பீடம்
26. நைமிமீசம் – தேவி பீடம்
27. புக்ஷ்காராக்ஷம் – புருகாதா பீடம்
28. ஆக்ஷாடம் – ரதி பீடம்
29. பாரபூதி – பூதி பீடம்
30. கண்ட முண்டம் – தண்டினி பீடம
31. நாமுலம் – நாகுலேஸ்வரி பீடம்
32. ஸ்ரீகிரி – சாராதா பீடம்
33. பஞ்ச நகம் – திரிசூல பீடம்
34. ஹரிச் சந்திரம் – சந்திரா பீடம்
35. ஆமரதகேஸ்வரம் – ஸீக்ஷம பீடம்
36. மஹாகாளாஸ்தி – சாங்கீரீ பீடம்
37. மத்யாபீதம் – சர்வாணி பீடம்
38. கயை – மங்கள பீடம்
39. கேதாரம் – மார்க்கதாயினீ பீடம்
40. பைரவம் – பைரவீ பீடம்
41. குருக்ஷேத்ரம் – தர்ணுப்பிரியை பீடம்
42. விபினாகுலம் – ஸ்வாயம் பலி பீடம்
43. கணகளம் – உக்ர பீடம்
44. விமகேஸ்வரம் – விஸ்வேஸ பீடம்
45. ஹடாஹாசம் – மதாந்தக பீடம்
46. பீமம் – பீம பீடம்
47. வஸ்த்ரம்பதம் – பவானி பீடம்
48. அவமுக்தம் – விசாலாக்ஷி பீடம்
49. அர்த்த கோடிகம் – ருத்ராணி பீடம்
50. அவமுக்தம் – வராஹி பீடம்
51. மஹாலயம் – மஹாபாகாபீடம்
52. கோகர்ணம் – பத்ரகாளீ பீடம்
53. பத்ரகர்ணீகம் – பத்ரா பீடம்
54. ஸ்தாணும் – ஸ்தாணவீசா பீடம்
55. ஸ்வர்ணாக்ஷம் – உத்பலாக்ஷி பீடம்
56. கமலாலயம் – கமலா பீடம்
57. சகமண்டலம் – ப்ரசண்ட பீடம்
58. மகேடெம் – மகுடேஸ்வரி பீடம்
59. குரண்டலம் – த்ரிசந்திரகா பீடம்
60. மண்டலேசம் – சரண்டகா பீடம்
61. ஸ்தூல கேஸ்வரம் – ஸ்தூல பீடம்
62. சங்க கர்ணம் – தீவனி பீடம்
63. கரவஞ்சம் – காளி பீடம்
64. ஞானிகள் இதயம் – பரமேஸ்வரி பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீதேவி இராஜராஜேஸ்வரி துணை

# மாதாந்த வெளியீடு

சிவாச்சாரியாரின்

# அருள்ஜோதி

(ஆன்மீக மலர்)



### சந்தா விபரம்

| | |
|---|---|
| ஆயுட் காலம் | 1000.00 |
| ஆண்டுச் சந்தா | 300.00 |
| தனிப்பிரதி | 25.00 |
| வெளிநாடுகளுக்கான ஆயுட் சந்தா | U. S. $ 50 |


தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

சர்வதேச இந்து மத குருபீடாதிபதி

**கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார்**

(அகில இலங்கை சமாதான நீதிவான்)

**சர்வதேச இந்துமத குருபீடம்**

**INTERNATIONAL HINDU RELIGIOUS GURU PEEDAM**

(APPROVED BY THE GOVERNMENT OF SRI LANKA)

**சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம்**

**46, 7வது லேன், கொட்டாஞ்சேனை, கொழும்பு-13.**

46, 7th Lane, (Bloemendhal Road) Kotahena, Colombo-13.
Tel: 2393436, 0722 422239



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*Printed by: Anush Printers Col-11. Tel: 0777 244893*